சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

நான் 2008 ஆம் ஆண்டில் தாவா சொத்தை கிரயம் பெற்றபோது அதன் மதிப்பு எவ்வளவு என்றால் ஒரு சதுர அடி ரூபாய் 800 ஆகும். அவ்வாறு நான் எத்தனை சதுர அடி கிரயம் பெற்றேன் என்றால் 2075 சதுரடி கிரயம் பெற்றேன். வாதி தரப்புச் சான்றாவனம் 4 தான் அந்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். அவ்வாறு நான் சதுர அடி ரூபாய் 800க்கு கிரயம் பெற்று இருந்தால் 2075 சதுர அடிக்கு ரூபாய் 14,52,500/- மதிப்பு வரும் என்றால் சரிதான். வாதி தரப்பு சான்றாவணம் நான்கு கிரைய பத்திரத்தில் மதிப்பு ரூபாய் 5,00,000/- காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2008ல் நான் கிரயம் வாங்கிய பிறகு 2016 ஆம் ஆண்டில் அதன் மதிப்பு உயர்ந்திருக்கும் என்றால் சரிதான். 2016 ஆம் ஆண்டில் இரண்டாம் பிரதிவாதிக்கு நான் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தில் மதிப்பு எவ்வளவு போடப்பட்டுள்ளது என்றால் ரூபாய் 32,75,000/- கட்டப்பட்டுள்ளது. வாதித்தரப்புச் சான்றாவனம் 5 தமிழில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படம் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து என்னை எடுக்கப்பட்டது ஆகும். மேற்படி கிரைய பத்திரத்தின் எல்லா பக்கங்களிலும் என் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர வேறு எங்கும் எனக்கு சொத்து இல்லை. தாவா சொத்தில் தான் நான் குடும்பத்தோடு வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை இரண்டு லட்சத்திற்காக அடமானம் வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஏதேனும் வங்கியில் போய் தாவா சொத்தை அடமானம் வைக்க முயற்சித்தேனா என்றால் இல்லை. 2020 ஆம் ஆண்டில் 32 லட்சத்திற்கும் கூடுதலாக தாவா சொத்தின் மதிப்பு இருந்திருக்கும் என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டில் நான் வழக்கு தாக்கல் செய்த போது 2016 ஆம் ஆண்டின் மதிப்பை காட்டி நான் நீதிமன்ற முத்திரை கட்டிடம் செலுத்திய உள்ளேன் என்றால் சரிதான். 6.9.2019 அன்று இரண்டாம் பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் என்னை மறைமலைநகர் காவல்

நிலையத்தில் விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். அந்த புகாரை நான் காலி செய்து கொடுக்காததாலும், சுவாதீனத்தை ஒப்படைக்காததாலும் கொடுத்தார் என்றால் இல்லை. நான் அடமான பத்திரம் எழுதியதாகவும் பிரதிவாதி கிரையப்பத்திரம் எழுதி வாங்கி இருப்பதாகவும் போலீஸ் விசாரணையில் சொன்னோம். போலீஸ் விசாரணையின் போது என்னுடன் யார் வந்தார்கள் என்றால், நானும் இரண்டாம் பிரதிவாதி பத்மநாபன் இருந்தோம். என்னுடன் என் அண்ணன் வரவில்லை. பிரதிவாதி உடன் இரண்டு நபர்கள் வந்தார்கள். நான் ஒரு கடிதத்தை போலீசு விசாரணையில் எழுதிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரிதான். (சாட்சியிடம் ஜெராக்ஸ் நகலை காட்டி குறியீடு செய்ய கேட்டபோது இந் நீதிமன்றம் அதனை நிராகரித்து விட்டது) போலீஸ் விசாரணையில் இரண்டு மாதங்களுக்குள் வீட்டை காலி செய்து சாவியை பிரதிவாதியிடம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான். போலீஸ் என்னை அடித்து துன்புறுத்தியதால் எழுதிக் கொடுத்தேன். அவ்வாறு ஒரு மாதத்திற்குள் நான் காலி செய்து சாவி கொடுக்காததால் மீண்டும் என்னை காவல் நிலையத்தில் அழைத்தார்கள் என்றால் சரிதான். அப்போதும் நான் ஒரு கடிதத்தை காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்தேன் என்றால் இல்லை. அப்போது நான் காவல் நிலையத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாக எழுதி தரவில்லை. முதல் முறை விசாரித்தபோது எழுதிக் கொடுத்தேன். நான் போலீசில் ஒப்புக்கொண்டபடி காலி செய்து சாவியை ஒப்படைக்காததால் இரண்டாம் பிரதிவாதி எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. அந்த அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. அவ்வாறு தான் சொத்தை காலி செய்து சுவாதீனம் கொடுக்காததால் செங்கல்பட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் RLTOP 3/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் நான்தான் முதலில் வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர் உரை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். மேற்படி எதிர் உரையின் பிரதிவாதிக்கு சார்பான நகல் என் முன் காட்டப்படுவது தான். அந்த எதிருரை பிரதிவாதி திறப்புச் சான்றாவணம் 1. கிரைய பத்திரத்தை அனுசரித்து ஒன்றாம் பிரதிவாதியின் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை மாறுதல் ஆகி உள்ளது என்றால் அவர் 2019 ஆம் ஆண்டில் மாற்றிக்கொண்டார். இரண்டாம் பிரதிவாதி அவரது பெயரில் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பை மாற்றிக் கொண்டார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான சொத்து வரியை 2016 ஆம் ஆண்டிற்கு பிறகு இரண்டாம் பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் நான் சொத்து வரி செலுத்தியதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வாதி தரப்பு சான்றாவனம் 8 ஆனது 2014 ஆம் ஆண்டு காலகட்டத்தில் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். 2016 ஆம் ஆண்டில் எனக்கு அவசரமான பண தேவை இருந்ததால் என் நண்பரான ஒன்றாம் பிரதிவாதி மூலம் இரண்டாம் பிரதிவாதி இடம் தாவா சொத்தை விற்பதற்கு கிரயம் பேசினேன் என்றால் சரியல்ல. அவ்வாறு 25.1.2016 அன்று பேசி தாவா சொத்தின் கிரைய தொகையாக 32,75,000/- என்று முடிவு செய்தேன் என்றால் சரியல்ல. 07.3.2016 அன்று எனக்கு உடனடியாக பணத்தேவை இருந்ததால் ரூபாய் 31.75,000/- ரொக்கமாக பெற்றுக் கொண்டு ஒரு கிரைய உடன்படிக்கை எழுதிக் கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. அதே தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து மீதமுள்ள ரூபாய் ஒரு லட்சத்தை பெற்றுக் கொண்டு என்னுடைய அசல் மூல ஆவணங்களை அனைத்தையும் இரண்டாம் பிரதிவாத இடம் ஒப்படைத்துவிட்டு அதன் பிறகு வாதி தரப்பு சான்றாவனம் 5 கிரைய பத்திரத்தை எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதன்பின்னர் நான் உடனடியாக வேறு வீடு பார்க்க முடியாததால் எனது பிள்ளைகளுடன் தாவா சொத்தில் தொடர்ந்து வாடகைதாரராக குடியிருப்பதற்கு அனுமதி கேட்டு அதன் பேரில் இரண்டாம் பிரதிவாதி அனுமதி கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன் பின்னர் 10.3.2016 அன்று எனக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் இடையே ஒரு வாடகை ஒப்பந்தம்

ஏற்பட்டு அதன் பெயரில் ரூபாய் 50 ஆயிரம் முன் பணம் ஆகவும் மாதம் ஒன்றுக்கு 9000 வாடகையும் பேசி ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதன்படி நான் இரண்டு ஆண்டுகள் முறையாக வாடகை பணம் செலுத்தினேன் என்றால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டில் நான் வாடகை தர மறுத்ததால் தான் இரண்டாம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. இரண்டு ஆண்டுகள் வாடகை செலுத்தாததாலும் சொத்தை காலி செய்து சுவாதீனம் கொடுக்காததாலும் செங்கல்பட்டு உரிமையியல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆர்எல்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரியான மறு பயனை பெற்றுக் கொண்டு இரண்டாம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரத்தை எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது அதனை முறியடிக்கும் வண்ணம் பொய்யான சங்கதிகளை கூறி ஒன்றாம் பிரதிவாதி மூலம் ஏமாற்றப்பட்டதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்கான சரியான நீதிமன்ற முத்திரை கட்டணத்தை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. சொத்தின் மதிப்பையும் சரியாக காட்டவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு உரிய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை